மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குறைந்தபட்சம் 20,000 கால்நடைகளுக்கு மேலாக இருக்குமானால் அதற்கு முன்னுரிமை வழங்கப்படும். 20,000 கால் நடைகள் என்று சொல்லும்போது, Breedable cattle population என்று சொல்லக் கூடிய இன விருத்திக்குத் தகுதி வாய்ந்த கால்நடைகளைக் கணக்கில் எடுத்து, ஆய்வு செய்யப்படுகிறது. உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்னால், அவசியத் தேவையிருப்பின், முன்னுரிமை கொடுத்து அங்கே இருக்கும் அவசியத் தேவையை உணர்ந்து, இதில் அரசு முடிவெடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''கால்நடைகள்'' என்று சொல்லும்போது, அந்தக் கால்நடைகளுக்கு எத்தனை கால்கள் இருக்க வேண்டுமென்பதையும் கணக்கில் எடுப்பீர்களா? (சிரிப்பு)

திருபுவனம் அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம்.

*3144—திரு. செ. இராமலிங்கம் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், திருபுவனம் கைத்தறி பட்டுக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் திருபுவனம் அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் கட்ட அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளதா ?

(ஆ) Common good fund என்னென்ன பணிகளுக்குப் பயன் படுத்தப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் பொதுநல நிதியில் இருந்து அங்கத்தினர்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை (Medical) பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு சீருடை, கல்வி, உதவித் தொகை, பயிற்சிக் கட்டணம், பத்தாம் வகுப்பு, +2 மாணவர் முதல் மதிப்பெண் உதவித் தொகை, தினசரி பேப்பர்கள் போன்ற கல்வி இனங்களுக்கும், இலங்கைத் தமிழர் நிதி உதவி, நெசவாளர் நல்வாழ்வு அரசு அறக்கட்டளை போன்ற இனங்களுக்கும் செலவிட்டுள்ளது.

திரு. இரே. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருபுவனம் கைத்தறி பட்டுக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக அரசு உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம் ''காமன் குட்ஃபண்ட்'' மூலமாகக் கட்டுவதற்கு அனுமதி கோரப்பட்டதற்கு

எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது? ஒவ்வொரு சங்கமும் எவ்வளவு தொகை இந்த நலக் காரியத்திற்காக வழங்கலாம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க வெள்ளி விழா நினைவு அரசு உயர்நிலைப் பள்ளிக்காக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் 2,000 ரூபாய் வீதமும், மத்திய மற்றும் தலைமைச் சங்கங்கள் 5,000 ரூபாய் வரையிலும் செலவு செய்துகொள்ளலாம். அதற்கு மேற்பட்ட தொகை செலவு செய்ய வேண்டுமானால் பதிவாளர் அனுமதி பெற்றுத்தான் அந்தந்த சங்கங்கள் அந்தந்த இனங்களுக்குச் செலவிடலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைமலை நகரில் வீட்டுமனை மற்றும் எல். ஐ. ஜி. வீடுகளின் விலை.

*3409—திரு. உ. ரா. வரதராசன் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மறைமலை நகரில் வீட்டுமனை மற்றும் எல்.ஐ.ஜி. வீடுகளின் விலையை 100 சதவீதமாக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உயர்த்தி இருப்பதைக் குறித்து, அந்நகர் வாழ் மக்களின் Arbitration கோரிக்கை மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே,

மறைமலை நகரில் வீட்டுமனை மற்றும் எல்.ஐ.ஜி. வீடுகளின் விலையை 100 சதவிகிதம் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உயர்த்தியிருப்பதைக் குறித்து அந்நகர் வாழ் மக்களிடமிருந்து (Arbitration) கோரிக்கை ஏதும் இக்குழுமத்திற்கு வரவில்லை. ஆனால், விலை ஏற்றம் குறித்து ஒதுக்கீட்டுதாரர்கள் தொடுத்த வழக்கு ஒன்று செங்கல்பட்டு முனிசீப் கோர்ட்டில் உள்ளது. கோர்ட்டின் தீர்ப்பிற்குப்பின் இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த விலையேற்றத்திற்குக் காரணமான ஒரு அம்சம், மறைமலை நகருக்குப் பாலாற்றிலிருந்து குடிநீர் கொண்டு வர திட்ட மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 4.15 கோடி, அங்கே மனைகள், வீடுகள் வாங்கிய மக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கிறது என்று நான் அறிகிறேன். குடிநீர் விநியோகத்திற்கான செல